# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 58 / 2021 நாள்: 17.11.2021

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சாதாரணத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் உள்ளிட்ட அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து கலந்தாய்வுக்கூட்டம் இன்று 17.11.2021 பிற்பகல் காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் நடைபெற்றது.**

மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கு சாதாரணத் தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் உள்ளிட்ட அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த கலந்தாய்வுக்கூட்டம் காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையிலும், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையிலும் இன்று (17.11.2021) நடைபெற்றது.

நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கோவிட் - 19 தொற்று, தடுப்பு வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றி போதுமான தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை சுமூகமான முறையில் நடத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கிட இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் துறை, முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்டத் தேர்தல் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

..2..

இக்கூட்டத்தில் தேர்தல் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு வாரியான புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல், வாக்காளர் தொடர்புபடுத்தும் பட்டியலுக்கான மாவட்ட தேர்தல் அலுவலர்களின் சான்று, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களின் காலியிடங்களை நிரப்புதல், வாக்குப்பதிவு அலுவலர்களின் விவரங்களை ஆணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல், மண்டல அலுவலர்களின் நியமனம், வாக்குப்பதிவு இயந்திரங்களை BEL நிறுவன பொறியாளர்கள் மூலம் முதல்நிலை சோதனை, தேர்தலுக்கான பொருட்களின் இருப்பு, வாக்கு எண்ணிக்கை மையங்கள் இறுதி செய்தல், வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி இடங்கள், பதற்றமான வாக்குச்சாவடிகளைக் கண்டறிதல் மற்றும் வாக்குப்பதிவு இடங்களில் சிசிடிவி கேமரா பொருத்துதல், உள்ளிட்ட கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

இக்கூட்டத்தில் கூடுதல் காவல்துறை இயக்குநர் திரு ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு பா. பொன்னையா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) திரு விசுமகாஜன், இ.ஆ.ப., காவல் உதவி தலைவர் (தலைமையிடம்) முனைவர் எம். துரை, இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி கு. தனலட்சுமி, உதவி ஆணையர் (தேர்தல்) திரு அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

17/11/2021

மக்கள் தொடர்பு அலுவலர்